## திராவிட இயக்க இதழ்கள் - ‘இனி’




திராவிட இயக்கச் செயல்பாட்டாளர் சுப.வீ, பத்திரிகையாளர் திருமாவேலன், வழக்கறிஞர் அருள்மொழி, பேராசிரியர் வவுனியன், ‘அடையாறு மாணவர் நகலகம்’ அருணாச்சலம் போன்ற பலரின் முயற்சியால் வெளிவந்த இதழ், ‘இனி’. அதற்கு முன்பு ‘விடுதலைக் குயில்கள்’ என்ற பெயரில் வெளிவந்த இதழின் வளர்ச்சிதான் ‘இனி’ என்றும் சொல்லலாம்!

1990-களில் வெளிவந்த மிக முக்கியமான, காத்திரமான இதழ், ‘இனி’. 1992 டிசம்பர் மாதம் தொடங்கி, 1996 வரை, இடையிடையே சில காலம் இடைவெளிவிட்டு இந்த இதழ் வெளிவந்துள்ளது. இதழின் முகப்பு அட்டையில் ‘சமூக, அரசியல் மாத இதழ்’ என்ற முழக்கத்துடன் வந்தாலும், அதில் பிரபஞ்சன், இன்குலாப் போன்ற இலக்கியவாதிகளும் செறிவான பங்களிப்பை ஆற்றியுள்ளனர்.

‘விடுதலைக் குயில்களா, விடுதலைப் புலிகளா?’ என்று போகுமிடமெல்லாம் எழுந்த கேள்வியைத் தொடர்ந்து, இதழுக்குப் புதிய பெயர் சூட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்போது, எஸ்.வி.ராஜதுரையால் ஏற்கெனவே ‘இனி’ என்ற பெயரில் இதழ் ஒன்று தொடங்கப்பட்டு, சில காலம் நடத்தப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தது. அவரிடம் அந்தப் பெயரைக் கேட்டு வாங்கி, புதிய இதழுக்குப் பெயர் சூட்டப்பட்டது.

நேர்காணல்கள், கேள்வி பதில்கள், புத்தக விமர்சனம், தொடர்கள், கவிதைகள், சிறப்புக் கட்டுரைகள், கேலிச் சித்திரங்கள் எனப் பல்சுவை இதழாகவே ‘இனி’ மலர்ந்தது. பிரபாகரன், வைகோ, தொல்.திருமாவளவன் போன்று அன்று வளர்ந்து வந்த தலைவர்களின் ஆரம்ப கால பேட்டிகள் எல்லாம் இந்த இதழில் வெளிவந்துள்ளன.

2023-இல் இந்த இதழின் சில இதழ்கள் எழுத்தாளர் அழகியபெரியவனால் புத்தகமாகத் தொகுக்கப்பட்டு, கருஞ்சட்டைப் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்





க.கிருஷ்ணமூர்த்தி

### இளைஞர் அணித் தொடக்க காலம்!

1984 - ஆம் ஆண்டு கழக இளைஞர் அணியை அமைப்பு ரீதியாக வலுப்படுத்த அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தமிழ்நாடு முழுக்க சுற்றுப்பயணம் மேற்கொண்டு இளைஞர்களைச் சந்தித்தார். அப்போது, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை தந்த தளபதி அவர்களை புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் சந்தித்து உரையாடினோம். இன்றைய கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் துரைமுருகன், அன்றைய மாவட்டக் கழகச் செயலாளர் பெரியண்ணன், துணைச் செயலாளர் கீரை தமிழ்ச்செல்வன், திருச்சி சிவா, சந்திரசேகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

**– முனைவர் க.கிருஷ்ணமூர்த்தி,**
**பேராசிரியர், அழகப்பா பல்கலைக்கழகம்,**
**காரைக்குடி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பெரியாருக்கு வெள்ளிச் சிம்மாசனம்!

1971-ஆம் ஆண்டு சேலத்தில் தந்தை பெரியார் அவர்களுக்கு வெள்ளிச் சிம்மாசனம் வழங்கும் விழா, முதலமைச்சர் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. மேடையில் இருந்த பெரியார், கலைஞரை “இங்கே வா இங்கே வா”என்று கையைப் பிடித்து தாம் உட்கார வேண்டிய வெள்ளிச் சிம்மாசனத்தில் அமர வைத்து அழகு பார்த்தார். அதைப் பற்றி தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, ‘என்னுடைய வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு பொன்னாள் இந்நாள்’ என்று சொல்லியிருக்கின்றார்.

## முதன் முதலில் 26

**ந.வினோத்குமார்**

**திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் ‘திராவிட மரபு’ தொடர் இது...**

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அண்ணா நூற்றாண்டு நூலகத்தைத் திறந்தார். கலைஞர் நூற்றாண்டில் நமது கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் திறந்தார். கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் தனது தொகுதியில் நடமாடும் நூலகம் திறந்தார். தற்போது தமிழ்நாடு முழுவதும் அனைத்துத் தொகுதிகளிலும் இளைஞர் அணியால் ‘கலைஞர் நூலகங்கள்’ திறக்கப்பட்டு வருகின்றன.

இன்றைய காலத்தை விடுங்கள். தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு முன்பும் கூட தமிழ்நாட்டில் கல்வி, போதனை, பொது இடங்களில் புத்தக வாசிப்பு என்பன போன்ற விஷயங்கள் எல்லாம் சிலரிடம் மட்டுமே இருந்தன. அந்தச் சூழலில் தமிழ்நாட்டின் பல இடங்களில் தலைவர்கள் பலரின் பெயரில் ‘வாசகசாலை’ திறந்து அறிவூட்டிய இயக்கம் திராவிட இயக்கம்.

ஆம்... அரசு அல்லாத தனியாரும் அல்லாத ஓர் இயக்கத்தின் சார்பாக முதன்முதலில் பொது இட வாசிப்புகளை வாசகசாலைகள், படிப்பகங்கள், நூலகங்கள் ஆகியவை மூலம் ஊக்குவித்த மரபு திராவிட இயக்கத்துக்கே உரியது.








# சிந்தனையை வளமாக்கும் படிப்பகங்கள்!

பெரியார் அவர்களால் 1925-ஆம் ஆண்டு மே 2- ஆம் தேதி முதல் ‘குடிஅரசு’ இதழ் வெளியிடப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் அவர் வைக்கம் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தார். அவரது போராட்டம் வெற்றிபெற்று, அவருக்கு ‘வைக்கம் வீரர்’ என்ற புகழ்ப் பெயர் சூட்டப்பட்டது. தொடர்ந்து, ராமநாதபுரம், திருச்சி உள்ளிட்ட பல ஊர்களில் ‘வைக்கம் வீரர் வாசகசாலை’ என்ற பெயரில் நூலகங்கள் திறக்கப்பட்டன.

அப்போது அந்த வாசகசாலைகளுக்குச் சென்று படிப்பவர்கள் மீது அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்று பல ஊர்களில் வைதீகர்கள் முடிவெடுத்தார்கள். அதைக் கேள்விப்பட்ட பெரியார், 1929- ஆம் ஆண்டு டிசம்பர் 1 தேதியிட்ட ‘குடிஅரசு’ இதழில் இவ்வாறு எழுதினார்:

“வாசகசாலைக்குச் சென்று படிப்பவர்களுக்கு அபராதம் விதிப்பதென்றால், இதைவிடக் கொடுமையானதும் மக்களை மடையரென்று நினைப்பதுமான தீர்மானம் வேறுண்டோ?

கல்வியைப் பரப்புவதற்காக நகரங்கள் முதல் குக்கிராமங்கள் வரையிலும் காருண்ய கவர்ன்மென்டாராலும், பச்சையப்ப முதலியாரவர்களாலும், ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்களாலும், இன்னும் அநேக தர்மசிந்தனையுடைய தனவந்தர்களாலும் கல்வியின் பயனைக் கருதி கோடிக்கணக்கான பொருள்களைச் செலவு செய்து கணக்கற்ற கலாசாலைகளையும் பல்கலைக்கழகங்களையும் நிறுவி, மக்களை மக்களாகச் செய்துவரும் இந்நாளில் இந்தக் குடுக்கைகள் செய்த தீர்மானத்திற்குப் பொருளுண்டா? என்பதை அறிஞர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுகின்றோம்".

**பெரியாரது அந்த மனக்குறையைப் போக்கும் வண்ணம் இன்று கழகமும், ‘திராவிட மாடல்’ அரசும் அறிவு மையங்களைத் திறந்து வைக்கின்றன.**

இப்படிப் பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலேதான் படிப்பகங்கள் தோன்றின. இன்றும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

“பள்ளிக்கூடங்கள் எழுத்து வாசனையையும் ஏதாவதொரு விஷயத்தில் விளக்கத்தையும்தான் உண்டாக்க உதவும். ஆனால், வாசகசாலை என்பது பொது அறிவு விளக்கத்தையும் சகல விஷயங்களிலும் ஞானத்தையும் உண்டாக்கும். நல்ல முறையில் அமைக்கப்படும் வாசகசாலையும், புத்தகசாலையும் மனிதர்களை சகல விஷயங்களிலும் ஞான பண்டிதர்களாகவும் அனுபவ ஞானமுடையவர்களாகவும் ஆக்கிவிடும். நம் நாட்டில் பொது உணர்ச்சியின் மீது ஏற்படுத்தப்படும் வாசகசாலை, புத்தகசாலை மிகக் குறைவென்றே சொல்லலாம்” என்று நூலகங்களின் முக்கியத்துவத்தைப் பற்றி 1938-ஆம் ஆண்டு மார்ச் 1- ஆம் தேதி காஞ்சிபுரம், பனகல் அரசர் வாசகசாலையின் ஆண்டு விழாவில் பெரியார் குறிப்பிட்டுப் பேசினார்.

பெரியாரது அந்த மனக்குறையைப் போக்கும் வண்ணம் இன்று கழகமும், ‘திராவிட மாடல்’ அரசும் அறிவு மையங்களைத் திறந்து வைக்கின்றன.

...அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** 26


**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

1950-களில் திராவிட இயக்கங்கள் தீவிரமாக களம் காணும், நெருக்கடியை அளித்தவற்றில், ராஜாஜி கொண்டு வந்த ‘குலக்கல்வி’ திட்டம் குறிப்பிடத்தக்கது. அரசியல் ரீதியாகவும் சமூகவியல் நோக்கிலும் அதன் தாக்கம் அளவிடமுடியாதது.

குலக்கல்வித் திட்டம், அதைத் தொடர்ந்து நிகழ்ந்த எதிர்வினைகள் எல்லாம் காங்கிரஸின் பார்ப்பனிய தலைமையை ஒட்டுமொத்தமாக நீக்கிவிட்டன. ராஜாஜியை ஒதுக்கித் தள்ளி, காமராஜர் எழுச்சி அடைவதற்கு முழு வாய்ப்பை உருவாக்கியது.

**திட்டத்தின் தொடக்கம், அமலாக்கம், எதிர்வினைகள் ஆகியவற்றை இரண்டாம் இயலில் நூலாசிரியர் பதிவுசெய்துள்ளார்.**

அந்த வரலாற்றை எளிமையான எழுத்துநடையில் நமக்குக் கடத்துகிறது ‘சாதிக்குப் பாதி நாளா?’ என்ற நூல். இந்நூல் தே.வீரராகவனின் எம்.ஃபில் பட்ட ஆய்வாகும். இவர் கண்பார்வை அற்றவர் என்பதும், தமிழ்நாட்டில் முனைவர் பட்டம் பெற்ற முதல் பார்வையற்ற மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




# வரலாற்றில் ஒரு அத்தியாயம்!

மேற்கத்தியக் கல்விமுறையில் தொடங்கி, அது இந்தியாவில் எப்படிப் புரிந்து கொள்ளப்பட்டது, அதன் போக்கு எப்படி இருந்தது, இந்திய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த தலைவர்கள், கல்வி பற்றிய எத்தகைய பார்வையைக் கொண்டிருந்தனர் என்பது பற்றிய ஒரு அறிமுகத்தை நூலின் முதல் இயல் நமக்கு விளக்குகிறது.

திட்டத்தின் தொடக்கம், அமலாக்கம், எதிர்வினைகள் ஆகியவற்றை இரண்டாம் இயலில் நூலாசிரியர் பதிவுசெய்துள்ளார். 1937-1939-இல் ராஜாஜி சென்னை மாகாணத்தின் பிரதமராக இருந்த சமயத்திலேயே அவர் கொண்டிருந்தார் என்ற செய்தி சுவாரசியமானது. மேலும் அது மதுரை மாவட்டத்தில் உள்ள பெரியகுளம் பகுதியிலும் செயல்படுத்திப் பார்க்கப்பட்டுள்ளது. பின்னர், ‘இரண்டாம் உலகப்போரில் இந்தியா பங்கேற்கக்கூடாது’ என்ற காங்கிரஸ் ராஜினாமாவால் இத்திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்திற்கு எதிராக எழுந்த போராட்டங்கள், காங்கிரஸ் கட்சிக்குள்ளும், தமிழ்நாட்டு அரசியலிலும், ஆந்திர மாநில உருவாக்கத்திலும் செலுத்திய தாக்கத்தைப் பற்றி, நூலின் மூன்றாம் மற்றும் நானகாம் பகுதிகள் பேசுகின்றன.

பேரறிஞர் அண்ணா தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் போராட்டத்தோடு சேர்ந்து நடத்திய மும்முனைப் போராட்டம் என்பது, தி.மு.க போட்டியிட்ட முதல் தேர்தலில் (1957) 15 சட்டமன்ற இடங்களையும், 2 நாடாளுமன்ற இடங்களையும் கைப்பற்ற அச்சாரமாக அமைந்தது.


இப்படி இந்தத் திட்டம் ஏற்படுத்திய வரலாற்று மாற்றங்களின் விளைவுகள்தான் தற்கால தமிழ்நாட்டில் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார சூழலுக்கான பிரதான காரணங்களாக உள்ளன. அதைப் புரிந்துகொள்ள இந்தத் திட்டத்தையும் அதைச் சுற்றி நடந்த அரசியல் விவாதங்களையும் நாம் புரிந்து கொண்டாக வேண்டும். அந்த வகையில் தே.வீரராகவனின் ‘சாதிக்குப் பாதி நாளா?’ என்ற இந்நூல் முக்கியத்துவம் பெறுகிறது

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

582

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.